செ.வெ.எண்: 22/ மே நாள்: 11.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் சத்தியா அம்மையார் நினைவு அரசுக் குழந்தைகள் காப்பகத்தில் சேரத் தகுதியான மாணவ,மாணவிகள் விண்ணப்பிக்கலாம்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம், கதவிலக்கம் 9, அரண்மனை வளாகத்தில் சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் சத்தியா அம்மையார் நினைவு அரசுக் குழந்தைகள் காப்பகத்தில் சேரத் தகுதியான மாணவ,மாணவிகள் விண்ணப்பிக்கலாம்.

இக்காப்பகத்தில் முதல் வகுப்பிலிருந்து பிளஸ் டூ வரை உள்ளுறையும் மாணவியாக தங்கி கல்வி பயில்வதற்கு போதுமான வசதிகள் உள்ளது. காப்பகத்தில் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவிகளுக்கு உணவு, இருப்பிடம், சீருடை, கல்விச் சுற்றுலா மற்றும் மருத்துவ வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆகியவற்றுடன் பிளஸ் டூ படித்து முடித்த பிறகு மேற்படிப்பிற்கு பட்டம்/பட்டயம்/ தொழிற்கல்வி பயில உயர்கல்வி உதவித்தொகை ரூ.30,000/- மற்றும் மருத்துவம், பொறியியல் படிப்பிற்கு ரூ.50,000/- வீதம் ஒவ்வொரு வருடமும் அரசால் வழங்கப்படும்.

**சேர்க்கைக்கான நிபந்தனைகள்:**

1. 5-18 வயதிற்குள் பெண் குழந்தைகள் (ம) 5-10 வயதிற்குள் உள்ள ஆண் சிறார்கள் அவர்களின் தாய், தந்தை, பாதுகாவலருக்கு ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24,000/- ஆக இருத்தல் வேண்டும்.
2. பெற்றோர் இருவரும் இல்லாத (ம) கவனித்துக் கொள்ள நெருங்கிய உறவினர் இல்லாத ஆதரவற்ற (ம) கைவிடப்பட்ட குழந்தைகள்
3. குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு குறைவாக உள்ள கணவன் இறந்து தாயாரால் பராமரிக்கப்படும் குழந்தைகள் மற்றும் மனைவி இறந்து தந்தையால் பராமரிக்கப்படும் குழந்தைகள் (அ) கணவனால் கைவிடப்பட்டவரின் குழந்தைகள் (அ) கணவன் (அ) மனைவி சிறையிலிருக்கும் நிலையில் பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
4. மனநிலை பாதிக்கப்பட்ட அல்லது தொழுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களால் கவனிக்க இயலாத குழந்தைகள்
5. பெற்றோர்கள் இருவரும் உயிருடன் இருந்தும் தந்தை பணி செய்து வருமானம் ஈட்ட முடியாத கடும் ஊனமுற்றோராக இருந்து தாயாரால் பராமரிக்கப்படும் குழந்தைகள் இக்காப்பகத்தில் சேர்க்கப்படுவார்கள்.

இக்காப்பகத்தில் சேருவதற்கான விண்ணப்பத்தை காப்பகத்திலிருந்து பெற்று வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், தாய், தந்தையர் இல்லாததற்கான இறப்புச் சான்றிதழ், மாணவ/மாணவியருக்கு மருத்துவச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலர், இராமநாதபுரம் மற்றும் கண்காணிப்பாளர், சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகம், அரண்மனை வளாகம், இராமநாதபுரம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 04567-230466,229382

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**